# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | செல்வமணி | நாள் | 25.03.2024 |
| தகப்பனார் பெயர் | செல்லப்பன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

8) வாதி ஐயப்பன் என்பவரின் பாட்டனார் பெயர் அப்புசாமி என்றால், சரிதான். மேற்படி அப்புசாமிக்கு 1.குருசாமி, 2.சோமசுந்தரம், 3.பரமசிவம், 4.மயில்சாமி, 5.லிங்குசாமி மற்றும் இரு பெண் மக்கள் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி குருசாமி மற்றும் சோமசுந்தரம் ஆகியோர்கள் தற்போது இறந்துவிட்டனர் என்றால், சரிதான். மேற்படி அப்புசாமியின் வாரிசுகள் அவர்களது குடும்ப சொத்துக்களை பொறுத்து, பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால், சரிதான்.

9) மேற்படி பாகபிரிவினையில் அப்புசாமியின் மகன் லிங்குசாமி என்பவர் தனக்கு பாகப்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால், சரிதான். அதேபோல் அப்புசாமியின் மற்றொரு மகன் மயில்சாமியும் தன் பாக நிலத்தில் 1ஏக்கர் நிலத்தை மட்டும் மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால், சரிதான்.

10) 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் மகன்களாக 2ம் பிரதிவாதி சிவசாமியும், 1ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான கோவிந்தன் என்பவரும் அவர்களது பாகத்தை கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றால், சரிதான். மேற்படி பாக சொத்தை 1ம் பிரதிவாதியும் அவரது இரு மகன்களும் தங்களுக்குள் வாய்மொழியாக பாகபிவினை செய்துகொண்டனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி வாய்மொழி பாகபிரிவினையில் கோவிந்தனுக்கு பாகமாக பிரிந்த சொத்துக்களிலிருந்து 0.40 சென்ட் நிலத்தை மேற்படி கோவிந்தன் அவரது சகேதரரும் 2ம் பிரதிவாதியுமான சிவசாமியின் மனைவி கிருஷ்ணவேணியின் பெயருக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

11) வாதியின் தாயார் பொன்னி கடந்த 2000ம் வருடத்தில் சர்வே எண்.194ல் சுமார் 0.93–1/2 சென்ட் நிலத்தை வாதியின் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார் என்றால், சரிதான். நான் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். மேற்படி நிலத்தை தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பெற்றுக்கொண்டு மேற்படி நிலத்தில் தடவழி பாத்தியம் உள்ளதாக கூறி பொய்யான சங்கதிகளுடன் பிரதிவாதிகளுக்கெதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

12) மேற்படி அப்புசாமியின் வாரிசுகளான குருசாமி மற்றும் சோமசுந்தரத்தின் வாரிசுகளை தற்போது இவ்வழக்கில் வாதி தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். மற்ற வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருந்தால், உண்மையாக சங்கதிகள் தெரிந்துவிடும் என்பதால் தான் வாதி மற்ற நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல.

13) சர்வே எண்.194ல் உள்ள மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சர்வே எண்ணிற்குரிய பட்டா எண்.843 ஆகும். மேற்படி 843 பட்டாவில் யார் யாரெல்லாம் கூட்டுப்பட்டாதாரர்களாக உள்ளனர் என்றால், சோமசுந்தரம், லிங்குசாமி, மயில்சாமி, குருசாமி, பரமசிவம், சின்னுகவுண்டர், குள்ளையம்மாள் ஆகியோர்கள் கூட்டுப்பட்டாதாரர்களாக உள்ளனர். மேற்படி சின்னுகவுடரும், குள்ளையம்மாளும் யாருடைய வாரிசுதாரர்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சின்னுகவுடர் மற்றும் குள்ளையம்மாளின் பெயர்கள் எதனடிப்படையில் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

14) கூணாண்டியூரிலிருந்து மேச்சேரி செல்லும் கிழமேல் தார் சாலையிலிருந்து, தென்புறமாக சுமார் 30ஆண்டுகளுக்க மேலாக தடவழி சென்றுவருகிறது என்றாலும், மேற்படி தடத்தையொட்டி குருசாமி வகையறா, பச்சையண்ணன், தேவன் ஆகியோர்களது நிலங்கள் அமைந்துள்ளது என்றாலும், பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாக எவ்வித தடவழியும் இல்லை என்றாலும், பிரதிவாதிகள் தடவழி பாத்தியத்தை

அடைத்துவிட்டதாக சொல்வது தவறானது என்றாலும், சரியல்ல.

15) வாதி கடந்த 28.09.2022ம் தேதியில் குருசாமி மகன் தேவன், பச்சியப்பன் ஆகியோரிடமிருந்து 2–1/2 செண்ட் நிலத்தை தடவழிக்காக வாங்கியுள்ளதாகவும், மேற்படி தேவனுக்கு தடவழிக்காக வாதியின் பாட்டனார் சோமசுந்தரம் 2–1/2 செண்ட் நிலத்தை தடவழிக்காக அளித்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி கிரயம் பெற்ற தடவழியின் வழியாகத்தான் வாதியும், அவரது குடும்பத்தினரும் தற்போது சென்று வருகின்றனரா என்றால், ஆமாம்.

16) நான் சொல்வதுபோல் எந்த காலத்திலும் பிரதிவாதிகள் ச.எண்.194ல் உள்ளதாக சொல்லும் தடவழியை அடைக்கவில்லை என்றாலும், அவ்வாறு தடவழியை அடைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. மேற்படி கிரயம் பெற்றதாக சொல்லும் தடவழியின் வழியாக தான் வாதிகள் ஆரம்பத்திலிருந்தே சென்றுவருகின்றனர் என்றாலும், அதைதான் பின்னிட்டு தடவழி கிரயமாக ஏற்படுத்திக்கொண்டனர் என்றாலும், சரியல்ல.

17) மாற்று தடவழி உள்ளதாக நான் சொல்லும் நிலையில், எந்த சர்வே எண் வழியாக மேற்படி மாற்றதடவழி உள்ளது என்றால், ச.எண்.194ல் பட்டா எண்.843ல் உள்ள நிலத்தின் வழியாக மாற்று தடவழி உள்ளது. மேற்படி சங்கதிகளை நிரூபிக்க வாதிகள் என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதி என் உறவினர் என்பதால் வழக்கை பற்றி எந்த விவரமும் தெரியாமல், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.